**05.04.2025**

**C.C. No. 136/2024**
எ.**சா. 1 பரிமளம்**

**குறுக்கு விசாரணை**

1) எனது மொபைல் எண் 7867978085 ஆகும். எனக்கு சொந்த ஊர் காரைக்குடி ஆகும். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். எனது மாத வருமானம் எவ்வளவு என்றால் 3 லட்சமாகும். நான் வருமான வரி கணக்கு தாக்கல் செய்கிறேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. எனது மாத வருமானம் தொடர்பாக எனது வங்கி கணக்கை தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியாது. எதிரியை எப்படி தெரியும் என்றால் கடந்த 2015 முதல் தெரியும், பர்மா காலனி 6வது வீதியில் எதிரி வசித்து வருகிறார். நான் 9ம் வீதியில் வசித்து வருகிறேன். தற்போது வீரப்பன் நகரில் வசித்து வருகிறேன். எப்போதிலிருந்து மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன் என்றால் 2014 முதல் நான் வசித்து வந்ததேன் 2015 முதல் எதிரி எனக்கு பழக்கம்.

2) எதிரிக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் அவருக்கு திருமணம் ஆகவில்லை. அவர்கள் வீட்டில் யார் யார் உள்ளனர் என்றால் அவரது அப்பாவை நான் பார்த்ததில்லை. அவரது அம்மாவை பார்த்திருக்கிறேன். அவர் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். எதிரி எப்போது என்னிடம் பணம் கேட்டார் என்றால் டிசம்பர் 2023ல் கேட்டார். நான் 26.01.2024 அன்று பணம் கொடுத்தேன். மேற்படி பணத்தை என் வீட்டில் வைத்து சுமார் 12.00 மணியளவில் 18 ஐந்நூறு கட்டுக்களாக கொடுத்தேன். மேற்படி தொகைக்கு கடனுறுதிசீட்டு வாங்கினேன். என் வீட்டில் என் நண்பர் இருந்தார் எதிரி கடனுறுதிசீட்டு வாங்கி வந்தார். நான் 9 லட்சம் பணம் கொடுத்தேன். மேற்படி தொகை எவ்வாறு என்னிடம் கிடைத்தது என்றால் இடம் விற்று பணம் வந்தது அதை கொடுத்தேன். 7 சென்ட் இடம் விற்றேன். மேற்படி இடம் விற்றதற்கான ஆவணத்தை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.

3) மேற்படி இடம் எப்போது வாங்கப்பட்டது என்றால் சரியாக நினைவில்லை. எனக்கு

25.01.2024 அன்று எனக்கு பணம் வந்தததது. எதிரியின் செல் நம்பர் தெரியுமா என்றால் நினைவில்லை. என் மொபைலை பார்த்து சொல்லமுடியுமா என்றால் டைரியில் எழுதி வைத்துள்ளேன். போனில் இல்லை. எதன் அடிப்படையில் எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்றால் எதிரி அரசு வேலை செய்து வருவதால் கொடுத்தேன். எதிரி என்வீட்டிற்கு வரும்போது நானும் என் நண்பரும் இருந்தோம். காசோலை எப்போது கொடுத்தார் என்றால் எதிரி 3 மாதம் கழித்து பணம் தருவதாக சொன்னார், 3 மாதம் கழித்து வீட்டிற்கு சென்று பணத்தை கேட்டபோது காசோலையை கொடுத்தார். காசோலையை வாங்கும்போது யார் உடன் இருந்தார் என்றால் யாரும் இல்லை. என் முன்பாக காசோலையை பூர்த்தி செய்து கையொப்பம் செய்து கொடுத்தார். எதிரி என்னை யார் என்று தெரியாது என்று சொல்கிறார் என்றால் சரியல்ல. எதிரியின் வங்கி கணக்கு முடிக்கப்பட்ட காசோலையை வைத்து நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா , B.Sc., B.L., (Hon's))
விரைவு நீதிபதி காரைக்குடி